பொழுது, இப்பொழுது ஏற்படுகின்ற மாதிரியான வறட்சி நிலைமை வரும் போது, அந்த அணையைப் பயன்படுத்துவது என்பது முக்கியமான ஒன்று. எனவே, அது வரவேற்கத்தக்க திட்டமே தவிர, அதிலே செலவு எவ்வளவு, வரவு எவ்வளவு என்று நாம் கணக்கு பார்க்க வேண்டியதில்லையென்று கருதுகிறேன்.

உத்திரமேரூர் தாலுகாவில் "இடமிச்சி" ஏரித் திட்டம்.

*வினா எண். 939—திரு. எஸ். ஜகத்ரட்சகன்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உத்திரமேரூர் தாலுகாவை சார்ந்த "இடமிச்சி ஏரித் திட்டம்" எந்த நிலையில் உள்ளது?

(ஆ) எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) மற்றும் (ஆ) உத்திரமேரூர் அணைக்கட்டிலிருந்து துணைக் கால்வாய் மூலம் இடமாய்ச்சி ஏரிக்குத் தண்ணீர் வழங்கும் திட்டம் தலைமைப் பொறியாளரின் ஆய்வு ஆய்வில் உள்ளது.

கூம்புப்பள்ளம் அணைத் திட்டம்.

*வினா எண். 940—திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்தியமங்கலம் வட்டம் கூம்புப்பள்ளம் அணைத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) ஆம்.

(ஆ) இத் திட்டம் ஆய்வு செய்யப்பட்டு, விவர மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தள அதிகாரிகளின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ஆய்வில் உள்ளது என்று சொன்னார்கள். அதற்கு எவ்வளவு தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது? எவ்வளவு பாசன வசதி பெறும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

1981 ஏப்ரல் 29]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மதிப்பீடு ரூ. 112 இலட்சங்கள். இத் திட்டத்தால் பெரியார் மாவட்டம் சத்தியமங்கலம் வட்டத்திலுள்ள சிங்காசம்பாளையம், வரதம் பாளையம், காட்டுவீரம்பாளையம் ஆகிய கிராமங்களிலுள்ள 811 ஏக்கர் புஞ்செய்ப் பாசனம் பெற வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

விராலிமலைப் பகுதியில் டி.வி.எஸ். நிறுவனத்தின் கிளை ஒனறிலைத் துவங்கும் திட்டம்.

*வினா எண். 941—திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலைப் பகுதியில் டி.வி.எஸ். கம்பெனி (கிளை) துவங்க திட்டமிடப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அப்பகுதி மக்களுக்கு பணி முன்னுரிமை கொடுக்கும்படி நிர்வாகத்தினருக்கு அரசு ஆலோசனை வழங்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) இப்போதே அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்குத்தான் வேலைகள் கொடுக்கப்படுகின்றன.

(முற்பகல் 9.50)

திரு. த. மாரிமுத்து : டி.வி.எஸ்; நிறுவனம் அரசாங்கத்திடம் உதவி ஏதாவது கோரியுள்ளதா? அது எவ்வளவு ரூபாய் முதலீட்டில் அமைய உள்ளது ? எவ்வளவு பேர்களுக்கு அதில் பணி புரிய வாய்ப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : திருவாளர் சுந்தரம் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட் மதுரை, அந்தப் பகுதியில் மோட்டார் வாகனத் தொழிற்சாலை கட்டுமானப் பணிகள் செய்கிற தொழிற்சாலை துவங்குவதற்காக அந்தத் தொழிற்சாலைக்கான கட்டுமானப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. முதலீடு ஏறக்குறைய ஒன்றேகால் கோடி ரூபாய். 200 பேர்களுக்கு நேரடியாக வேலையும் அதத் தொழிற்சாலைக்கு வேண்டிய துணைத் தொழிற்சாலை ஏற்படுவதின் மூலம் 100 பேர்களுக்கு வேலையும் இப்படி ஏறக்குறைய 500 பேர்களுக்கு வேலை கிடைக்கும். பின்தங்கிய பகுதியில் அவர்கள் அதை ஆரம்பிக்கிற காரணத்தால் அதற்கான மானியமும் மற்றும் சப்சிடியும் அவர்கள் பெற்றுக்கொள்கிறார்கள். அவ்வளவுதான்.